| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 20.11.2025 | |
| CC.No.272/2025 | |
| சாட்சி : PW1 | |
| பெயர் : திருமதி. சகாயாராணி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சிவக்குமார் | தொழில் : வெத்தலை கடை |
| கிராமம் : தீராம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 40/2025 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 29.07.2025 அன்று இரவு 08.30 மணியளவில் மஞ்சம்பட்டி, புனித அந்தோனியார் துவக்கப்பள்ளி பாலத்தின் அடியில் சர்வீஸ் ரோட்டில் நடந்து கொண்டிருந்தபோது தீடீரென்று ஒரு நபர் எனது கழுத்திலிருந்த 3 பவுன் தங்கசெயினை பறித்து சென்றுவிட்டார். இருட்டில் பறித்த சென்ற நபர் யார் என்று தெரியவில்லை. எதிரியுடன் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்ததால் சந்தேகத்தின் பெயரில் அவரது பெயரில் புகார் கொடுத்தேன். பின்னர் 31.07.2025 ம் தேதி எனது செயின் கிடைத்துவிட்டதாக போலீசார் என்னிடம் தகவல் சொல்லி காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி எனது நகைகளை அடையாளம் காட்ட சொன்னதன் பெயரில் நான் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் மனுசெய்து எனத நகையை பெற்றுக்கொண்டேன். **நான் கொடுத்த புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகைப்படத்தில் உள்ள செயின் தான் களவுபோனது. அந்த செயின் ச.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன்.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

2. சம்பவத்தின் போது எதிரியின் முகத்தை பார்த்து ஊர் மற்றும் பெயர் தெரிந்துதான் புகார் கொடுத்துள்ளேன் என்றும் தற்போது எதிரியுடன் சமாதானமாக போய்விட்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 20.11.2025 | |
| CC.No.272/2025 | |
| சாட்சி : PW2 | |
| பெயர் : திரு.சின்னப்பன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சவரிமுத்து | தொழில் : விவசாயம் |
| கிராமம் : நொச்சிமேடு | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 60/2025 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். கடந்த 29.07.2025 அன்று இரவு 08.30 மணியளவில் மஞ்சம்பட்டி, புனித அந்தோனியார் துவக்கப்பள்ளி பாலத்தின் அடியில் சர்வீஸ் ரோட்டில் நடந்து கொண்டிருந்தபோது தீடீரென்று ஒரு நபர் எனது மகளின் கழுத்திலிருந்த 3 பவுன் தங்கசெயினை பறித்து சென்றுவிட்டதாக சொன்னார். அதன்பின்னர் எனது மகள் புகார் கொடுத்து களவாடிய செயினை நீதிமன்றத்தில் பெற்றுவிட்டார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.